## அசல் வழக்கு எண்.19/2021

**தேதி- 27.11.2025**

**வ.சா.1 : திரு. சீனிவாசன், த/பெ. பன்னீர்செல்வம்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். இந்த வழக்கு தாவா சொத்தை பிரதிவாதி எப்படி வாங்கினார் எப்போது வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் தேதி எனக்கு ஞாபகமில்லை, பிரதிவாதி கனரா வங்கியின் மூலம் தாவா சொத்தை ஏலத்தில் எடுத்தார். 20.03.2017 அன்று தான் பிரதிவாதி தாவா சொத்தை ஏலத்தில் எடுத்தார் என்றால் அதை நான் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

ஏலத்தில் எடுத்த சொத்தை 36 நாட்களுக்குள் விற்க வேண்டிய அவசியமோ, தேவையோ பிரதிவாதிக்கு இல்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். தாவாவில் பத்தி 2ல் 29.09.2020 அன்று DSP Office-ல் புகார் கொடுத்தேன் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். DSP என்னை விசாரித்தாரா என்றால் மறுநாள் 30.09.2020 அன்று விசாரித்தார், அப்போது நான் சொத்திற்காக கொடுத்த 20 லட்ச ரூபாய் அட்வான்ஸ் தொகையில் 10 லட்ச ரூபாய் மட்டும் வங்கி ஆர்.டிஜி.எஸ் மூலம் எனக்கு திரும்ப அனுப்பிவிட்டார், ரொக்கமாக நான் கொடுத்த 10 லட்ச ரூபாயை திரும்பி என்னிடம் கொடுக்காமல் காலதாமதாகி என்னை ஏமாற்றி வருகிறார், அதுமட்டுமல்லாமல் என்னை மிரட்டி நான் உனக்கு சொத்தையும் கொடுக்க மாட்டேன், ரூபாயையும் கொடுக்க மாட்டேன் என்றும் என்னை செய்கிறாயோ செய்துக் கொள் என்று என்னிடம் பிரதிவாதி கூறியதை நான் கூறினேன்.

நான் தாவாவில் சொல்லியுள்ள பத்தி 2ல் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியா என்றால் சரிதான். இந்த வழக்கு நிலை நிறுத்த தக்கதல்ல என்றால் சரியல்ல, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் DSP

அவர்களை என் தரப்பு சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் என் தரப்பு வழக்கறிஞரிடம் தான் நான் கேட்டு செய்ய வேண்டும்.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.